சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.11.03.2026.
SC.No.204/2019
PW1 : ( Lw3) – ஜெயபிரகாஷ் நாராயணன் (வயது 46 ) த/பெ.மருதை
(4, 6 எதிரிகள் மட்டும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது நவல்பட்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருக்கிறேன். கடந்த 07.09.2017 ஆம் தேதி திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு ஆய்வாளர் அதிவீரராமபாண்டியன் என்பவருக்கு உதவியாக நானும், HC 1015 முத்து கிருஷ்ணன் தலைமை காவலர் அவர்களும் ரோந்து சம்மந்தமாக மண்ணச்சநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே பணியில் ஈடுபட்டிருந்தோம்.

அப்போது திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.710/2017 பிரிவு 4(i)(aaa) r/w Transport Act 4(1-A) TNP Act ன் தலை மறைவு குற்றவாளிகள் பாண்டிச்சேரியை சேர்ந்த சிவகுமார் மற்றும் மண்ணச்சநல்லூரை சேர்ந்த குமார் ஆகியோர் மண்ணச்சநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தனர். எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சித்தவர்களை வளைத்து பிடித்து ஆய்வாளர் மற்றும் அவருக்கு உதவியாக தலைமை காவலர் 2512 ஆகிய நானும், தலைமை காவலர் 1015 முத்து கிருஷ்ணனும் இருந்து கைது செய்தோம்.

அவர்களை ஆய்வாளர் மற்றும் நாங்கள் இருவரும் சோதனை செய்தபோது, எதிரி குமாரிடமிருந்து வெள்ளை கலர் பட்டன் செல்லையும், சிவகுமாரிடமிருந்து கருப்பு கலர் சாம்சங் செல்போனையும் தனிதனியாக கைப்பற்றினோம். அதனை கைபற்றியதற்கு ஆய்வாளர் தனிதனியாக கைப்பற்றுதல் மகஜர் ( 2 எண்ணம் ) தயார் செய்தார் அதில் நானும் HC 1015 முத்து கிருஷ்ணனும் கையொப்பம் செய்தோம்.

07.09.2017 ஆம் தேதி 15 மணியளவில் கைது செய்தபோது, 15.15 மணியளவில் எதிரி சிவகுமாரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் HC 1015 முத்து கிருஷ்ணனும் கையொப்பம் செய்தோம். மற்றொரு எதிரி குமாரும் அடுத்த 15 நிமிடம் கழித்து அன்றைய தினம் 15.30 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையிலும்

HC 1015 முத்து கிருஷ்ணன் முன்னிலையிலும் கொடுத்தார் அதில் நாங்கள் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

சிவகுமாரிடம் கைப்பற்றிய செல்போனின் கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1** ஆகவும், குமாரிடம் கைப்பற்றிய செல்போனின் கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் அ.சா.ஆ.1 ல் இரண்டாவது சாட்சியாகவும், அ.சா.ஆ.2 ல் முதல் சாட்சியாகவும் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

சாட்சி தானாக முன்வந்து எதிரி குமாரிடமிருந்து 16.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக கூறுகிறார். எதிரி சிவகுமாரிடம் மற்றும் குமாரிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பமான 1வது சாட்சி கையெழுத்துடன் கூடிய ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.3** ஆகவும், **அ.சா.ஆ.4** ஆகவும் முறையே குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வெள்ளை கலர் செல்போன் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பு கு.வி**

நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறியுள்ள ஆய்வாளர் என்பவர் அதிவீரராமபாண்டியன் என்பவரை குறிக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பு எதிரிகளுக்கும் எங்களுக்கும் எவ்வித நேரடி தொடர்பு இல்லை என்றும் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

எதிரிகளை அடையாளம் காட்டுவதற்கு நாங்கள் வேறு யாரையும் அழைத்து சென்றோமா என்றால் இல்லை, ஆய்வாளருக்கு எதிரிகளை அடையாளம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் ஏற்பட்ட தேதியன்று ஆய்வாளர் அதிவீரராமபாண்டியன் பொறுப்பில் இல்லை என்றால் சரியல்ல, ஆய்வாளர் இருந்தார்.

அன்றைய தினம் அம்சவேணி என்ற ஆய்வாளர் முன்னிலையில் கைது நடைபெற்றதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறானது என்றால் சரியல்ல. அவரை பொறுப்பு

அதிகாரியாக நியமனம் செய்திருந்தார்கள், கைது செய்தபோது அதிவீரராமபாண்டியன் உடன் இருந்தார், அதன் பிறகு உடல் நிலை சரியில்லாததால் சென்றுவிட்டார்.

எதிரிகளை கைது செய்த இடத்திலேயே விட்டுவிட்டு ஆய்வாளர் அதிவீரராமபாண்டியன் சென்று விட்டாரா மற்றும் நிலைய பொறுப்பு அதிகாரியாக மற்றொருவர் பொறுப்பு எடுத்துக் கொண்டாரா என்றால் இல்லை. நிலையம் சென்று எதிரிகளையும், பொறுப்புகளையும் ஒப்படைத்துவிட்டு தான் சென்றார்.

நான் கூறுவது போல், நிலையம் சென்று எதிரிகளை, பொறுப்புகளை ஒப்படைத்து சென்றதால் மற்ற கைது நடைமுறைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் , ஒப்புதல் வாக்குமூலம் ஆகிய அனைத்து நடைமுறைகளையும் காவல் நிலையத்தில் வைத்து செய்து கொண்டோமா என்றால் ஆமாம்.

எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியா என்றால் ஆமாம். நான் ஆவணத்தில் சொல்லதுபோல் சாட்சியாக இருக்க யாரும் முன்வரவில்லை என்று கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. நான் சொன்ன இடம், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் அவர்களிடமிருந்து எந்தவித சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றும், அவர்களிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும் கூறினால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு செல்லாமல், காவல் ஆய்வாளர் கையெழுத்து போட சொன்ன இடத்தில் கையொப்பம் செய்துள்ளதால், சம்பவம் பற்றியும் அதற்கான நடைமுறைகள் பற்றியும் முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை

/ signed/
ஜெயபிரகாஷ் நாராயணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA

Digitally signed by R.MOHANA
Date: 2026.03.11 16:03:06 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி